ஒ. வெ. எண்: 656

நாள்: 04/08/2010

தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்
எண். 19-A, ருக்மினி லட்சுமிபதி சாலை (மார்ஷல் சாலை), எழும்பூர், சென்னை-600 008.
தொலைபேசி : ++91-044-2841 1376 / 2841 1378 / 2841 1379 தொலைநகல் : ++044-2841 1377
மின்னஞ்சல் : tnerc@nic.in இணையதளம் : www.tnerc.gov.in

# செய்திக்குறிப்பு

எண். 14 / 2010
நாள் . 04–8–2010

பொருள் : வீட்டின் உரிமையாளர்கள் வாடகைதாரர்களிடமிருந்து மின்கட்டணம் மிகையாக வசூலித்தல்.

*******

வீட்டின் உரிமையாளர்கள் வாடகைதாரர்களிடமிருந்து மின்கட்டணம் மிகையாக வசூலிக்கப்படுவதாக வெளியாகும் செய்திகளின் மீது தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் கவனம் ஈர்க்கப்பட்டுள்ளது.

2. வீட்டின் உரிமையாளர்கள் அதே வளாகத்தில் கூடுதலாக மின்னிணைப்பு பெற முடிவு செய்கையில் மேம்பாட்டுக் கட்டணம் மற்றும் மின்னிணைப்புக் கட்டணம் ஆகியவற்றிலிருந்து ஆணையத்தின் 24–6–2003 நாளிட்ட மின்கட்டண ஆணை எண். 1–3படி விலக்களிக்கப்பட்டுள்ளனர். வாடகைதாரர்களின் நலன் கருதியும் வீட்டு உரிமையாளரின் சுமையைக் குறைப்பதற்காகவும் இந்த ஆணை பிறப்பிக்கப்பட்டது.

3. இந்த ஆணையைப் பொருட்படுத்தாது சில வீட்டின் உரிமையாளர்கள், வாடகைதாரர்களிடமிருந்து அதிகக் கட்டணம் வசூலிப்பதாக புகார்கள் வந்த வண்ணம் உள்ளன. இரண்டு மாதங்களுக்கான மின் நுகர்வு 600 யூனிட்டுகளுக்கு மேற்படுகையில் வீட்டு மின் நுகர்வோருக்கான அதிகபட்ச மின்கட்டணம் யூனிட் ஒன்றுக்கு ரூ.4.05 மட்டுமே ஆகும். எனவே, வீட்டின் உரிமையாளர்கள் யூனிட் ஒன்றுக்கு ரூ.4.05க்கு மேல் மின் கட்டணம் வசூலிப்பது சட்ட விரோதமான செயலாகும். ஒரு வீட்டின் மொத்த மின் நுகர்வு 600 யூனிட்டுக்குக் குறைவாக இருக்குமானால், மின் நுகர்வைப் பொறுத்து யூனிட் ஒன்றுக்கு ரூ.2.20 / 1.50 / 0.85 / 0.75 / மட்டுமே சட்டப்படி வசூலிக்க முடியும்.

4. வாடகைதாரர்களிடம் அதிகக் கட்டணம் வசூலித்தல், 2003ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் 142 மற்றும் 146ஆம் பிரிவுகளின்படி ஒரு லட்சம் ரூபாய் வரை அபராதமும், மூன்று மாதங்கள் வரை சிறைத்தண்டனையும் விதிக்கப்படத்தக்க குற்றமாகும். தமிழ்நாடு மின்சார வாரியம் இது குறித்து மின்சாரச் சட்டத்தின் 142ஆம் பிரிவின்படி ஆணையத்தின் முன்பு அல்லது மின்சாரச் சட்டத்தின் 146ஆம் பிரிவின்படி உரிய குற்றவியல் நீதிமன்றத்தின் முன்பு புகார் செய்யும்படி அறிவுறுத்தப்பட்டுள்ளது.

(ப. முத்துசாமி)
இயக்குநர் (பொறியியல்)
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9

//